ஜூலை 2023 முதல் டிசம்பர் 2023 முடிய ஆறு மாதங்களுக்கான சம்பளம் வழங்கும் அதிகாரம் (Pay authorization for the month of July - December 2023)

பள்ளிக் கல்வித் துறை
தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

கடித எண்.9377/பக5(1)/2023-2, நாள் **28.07.2023**

அனுப்புநர்
திருமதி. காகர்லா உஷா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /
சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர் சென்னை-01 / 08 / 35.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

ஐயா,

பொருள்: பள்ளிக்கல்வி - 2020-2021 ஆம் கல்வியாண்டில் 45 அரசு / நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது - இப்பள்ளிகளில் ஐந்து அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட 55 தற்காலிகப் பணியிடங்களுக்கு **ஜூலை** 2023 முதல் டிசம்பர் 2023 முடிய ஆறு மாத காலத்திற்கு ஊதிய கொடுப்பாணை வழங்குதல் - குறித்து.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.11, பள்ளிக் கல்வி [ப.க.2(2)]த் துறை, நாள்: 18.01.2021.
2. அரசாணை (நிலை) எண்.61, பள்ளிக் கல்வி [பக2(2)]த் துறை, நாள் 26.02.2021.
3. அரசாணை (நிலை) எண்.253, பள்ளிக் கல்வி [பக5(1)]த் துறை, நாள் 12.02.2022.
4. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.070122/எல்/இ3/2022, நாள்: 13.07.2022.

-----------

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் 40 அரசு/ நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, பார்வை இரண்டில் காணும் அரசாணையில் கீழ்க்காணும் ஐந்து அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது.

| | |
|---|---|
| 1. | அரசு உயர்நிலைப் பள்ளி, கொங்கர்பாளையம், தூக்கநாயக்கன் பாளையம் ஒன்றியம், ஈரோடு மாவட்டம் |
| 2. | அரசு உயர்நிலைப் பள்ளி, கீழ்மாம்பட்டு, வல்லம் ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம். |
| 3. | அரசு உயர்நிலைப்பள்ளி, பனையூர், நரிக்குடி ஒன்றியம், விருதுநகர் மாவட்டம். |
| 4. | அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி, கெடார், காணை ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம் |
| 5. | அரசு உயர்நிலைப் பள்ளி, பாலி, உளுந்தூர்பேட்டை ஒன்றியம், கள்ளக்குறிச்சி மாவட்டம். |

தொடர்ந்து, அவ்வாணையில், மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படும் ஐந்து (5) அரசு உயர்நிலைப் பள்ளிகளில் ரூ.36,900-1,16,600 (நிலை 18) என்ற ஊதிய நிலையில் உள்ள உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களை, ரூ.56,900-1,80,200 (நிலை-23) என்ற ஊதிய நிலையில், மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடங்களாக நிலை உயர்த்தி அனுமதித்தும், மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படும் ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ.36,900-1,16,600 (நிலை 18) என்ற ஊதிய நிலையில், 9 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் (தமிழ், ஆங்கிலம், இயற்பியல், வேதியியல், உயிரியல், கணிதம், வரலாறு, பொருளியல் மற்றும் வணிகவியல்) வீதம் 45 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், மற்றும் ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ.36,900-1,16,600 (நிலை 18) என்ற ஊதிய நிலையில், 1 கணினி பயிற்றுநர் (நிலை 1) பணியிடம் வீதம் 5 பணியிடங்களும் ஆக மொத்தம் 55 பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்தும் ஆணைகள் வெளியிடப்பட்டது.

2. பார்வை மூன்றில் காணும் அரசாணையில், பார்வை இரண்டில் காணும் அரசாணையில் தோற்றுவிக்கப்பட்ட மேற்காணும் 55 தற்காலிகப் பணியிடங்களுக்கு கடைசியாக 26.02.2022 முதல் 31.12.2022 வரை தொடர் நீட்டிப்பு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

3. மேற்காணும் 55 தற்காலிகப் பணியிடங்களுக்கு 01.01.2023 முதல் 31.12.2025 வரை மேலும் மூன்றாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்க பள்ளிக் கல்வி இயக்குநர் அரசிற்கு கருத்துரு அனுப்பியுள்ளார். மேலும், தற்பொழுது, இப்பணியிடங்களுக்கு **ஜூலை** 2023 முதல் டிசம்பர் 2023 முடிய ஆறு மாத காலத்திற்கு ஊதியம் பெறத்தக்க வகையில் சம்பளம் வழங்க ஊதிய

கொடுப்பாணையினை (Pay Authorization) வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்குறிப்பிட்டுள்ள 55 தற்காலிகப் பணியிடங்களுக்கு 01.01.2023 முதல் 31.12.2025 வரை மேலும் மூன்றாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்நிலையில், இக்கடிதத்தின் இணைப்பில் கண்டுள்ள 55 தற்காலிகப் பணியிடங்களுக்கு **ஜூலை** 2023 முதல் டிசம்பர் 2023 முடிய ஆறு மாத காலத்திற்கு ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான **ஜூலை** 2023 முதல் டிசம்பர் 2023 முடிய ஆறு மாத காலத்திற்கு சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. இக்கடிதம் நிதித்துறையின் அ.சா.கு.எண். 27589/கல்வி(2)/2023, நாள் 28.07.2023 இல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

[signature] 28/7/23

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

[initials] 28.7.23

நகல்

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-6.
மாநிலக் கணக்காயர், சென்னை-18/35.
நிதி(கல்வி-II)த் துறை, சென்னை-9.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்:- இணை இயக்குநரக ந.க.எண்: 070122/என்/இ3/22 நாள்: 31.07.23

தகவலுக்காகவும் தக்க நடவடிக்கையின் பொருட்டும் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது.

பெறுநர்:-
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

[signature] 31/07/23
இணை இயக்குநர் (பணி)

அரசுக் கடித எண்.9377/பக5(1)/2023-2, நாள்: 28.07.2023 இன் இணைப்பு

2020-21ஆம் கல்வியாண்டில் தரம் உயர்த்தப்பட்ட அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட 55 தற்காலிக ஆசிரியர் பணியிடங்களின் விவரங்கள்:-

| | |
|---|---|
| பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்ட அரசாணை | அரசாணை (நிலை) எண்.61, பள்ளிக் கல்வி[பக2(2)] த் துறை, நாள் 26.02.2021. |
| மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் | பழைய ஊதிய விகிதம் : ரூ.9,300-34,800 + 4600 தர ஊதியம்.<br>புதிய ஊதிய விகிதம் : நிலை-23, ரூ.56,900 - 1,80,500/- |
| முதுகலை பட்டதாரி ஆசிரியர் | பழைய ஊதிய விகிதம் : ரூ.9,300-34,800 + 4800 தர ஊதியம்.<br>புதிய ஊதிய விகிதம் : நிலை-18, ரூ.36,900 -1,16,600/- |
| கணினி பயிற்றுநர் (நிலை 1) | பழைய ஊதிய விகிதம் : ரூ.9,300-34,800 + 4600 தர ஊதியம்.<br>புதிய ஊதிய விகிதம் : நிலை-18, ரூ.36,900 - 1,16,600/- |
| கயாசிடைக தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்ட அரசாணை மற்றும் காலம்: | அரசாணை (1டி) எண்.253, பள்ளிக் கல்வி[பக5(1)] த் துறை, நாள் 12.10.2022 .(26.02.2022 முதல் 31.12.2022 வரை) |
| பணியிடங்கள் அனுமதிக்கப்பட்ட் பள்ளிகளின் பெயர்கள்: | 1. அரசு உயர்நிலைப் பள்ளி, கொங்கர்பாளையம், தூக்கநாயக்கன் பாளையம் ஒன்றியம், ஈரோடு மாவட்டம்.<br>2. அரசு உயர்நிலைப் பள்ளி, கீழ்மாம்பட்டு, வல்லம் ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்.<br>3. அரசு உயர்நிலைப்பள்ளி, நரிக்குடி ஒன்றியம், விருதுநகர் மாவட்டம்.<br>4. அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி, கெடார், காணை ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்.<br>5. அரசு உயர்நிலைப் பள்ளி, பாலி, உளுந்தூர்பேட்டை ஒன்றியம், கள்ளக் குறிச்சி மாவட்டம். |
| பள்ளி ஒன்றுக்கு அனுமதிக்கப்பட்ட பணியிட விவரம் | மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் -1<br>முதுகலை பட்டதாரி ஆசிரியர்-9<br>கணினி பயிற்றுநர் (நிலை 1)-1 |
| மொத்த பணியிட விவரம் | மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் -5<br>முதுகலை பட்டதாரி ஆசிரியர்-45<br>கணினி பயிற்றுநர் (நிலை 1)-5 |
| மொத்த பணியிடங்கள் | 55 |

காகர்லா உஷா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

28/7/23

பிரிவு அலுவலர்.